பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 17 (03 - 10 - 1992) சனிக்கிழமை ஓசை 228

## தீருவிலில் தீயினுள் கலந்த பன்னிருவர் நினைவு தினம்

லெப்டினன்ட் கேணல் குமரப்பா, லெப்டினன்ட் கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு மாவீரர்கள் தங்களைத் தமிழ் மண்ணுக்காய் தற்கொடையாளர்களாக்கிய ஐந்தாவது ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் தமிழீழமெங்கும் நினைவு கூரப்படவுள்ளது இந்திய-சிறிலங்கா அரசுகளின் கூட்டுச் சதியினால் பாதிப்படைந்து இப் பன்னிரு வேங்கைகளும் பலாலி இராணுவ முகாமில் வீரச்சாவு அடைந்ததை நினைவுகூரும் இந்நாளில் சிற்றூர் வட்டம், கோட்டங்கள் மட்டங்களில் இவர்களுடைய உருவப் படங்கள் வைக்கப்பட்டு தூபிகள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் புனிதப்படுத்தப்பட்டு மாலையிட்டு, (4ஆம் பக்கம் பார்க்க)

( விடுதலைப் புலிகளின் அபார சாதனை )

# கட்டைக்காட்டில் 30 இராணுவத்தினர் பலி;

# 200க்கு மேற்பட்ட நவீன ஆயுதங்கள் மீட்பு

## ஆயுத கிடங்கு புலிகள் வசம்

[யாழ்ப்பாணம்]

கட்டைக் காட்டில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவில் இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இத்தாக்குதலின் போது சிங்கள இராணுவத்தின் ஆயுதக் கிடங்கை கைப்பற்றி, பெருந்தொகையான நவீன ஆயுதங்களை மீட்டெடுத்து, தமிழீழ ஆயுதப்போராட்டவரலாற்றில் என்றும் நிகழாத ஒரு மகத்தான இராணுவ சாதனையை புலிப் படைப் போராளிகள் நிலைநாட்டினர். இந்தத் தாக்குதலின் போது 50 கலிபர்,ஜி பி.எம்.ஜி துப்பாக்கிகள்,190க்கும்அதிகமான தானியங்கிகள்,இரண்டரைலட்சத்திற்கும்அதிகமான ரவைகள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்தப் பெரும் தாக்குதலில் மகளிர் படையணி இம்ரான் - பாண்டியன் படையணி, கடற்புலிகள் கூட்டாய் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நள்ளிரவு 11-55 மணிக்கு விடுதலைப்புலிகளின் விசேட படையணிகள் இத்தாக்குதலை ஆரம்பித்தன. விடுதலைப் புலிகள் மகளிர் படையணியும, இம்ரான்—பாண்டியின் விசேட படையணியும், கடற்புலிகளும் தொடக்கிய இத் தாக்குதல் சுமார் ஒரு மணித்தியாலம்வரை நீடித்தது. இதன் பின்னர் கட்டைக்காட்டு இராணுவ மினிமுகாமும், ஆயுதக் கிடங்கும் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன

இவ் ஆயுதக்கிடங்கில் இருந்து பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பறப்பட்டன சிறிலங்கா இராணுவத்துடனான போரில் இவ்வளவு பெருந்தொகைஆயுதங்களை விடுதலைப் புலிகள் இதுவரை கைப்பற்றியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கி. ஜி பி. எம். ஜி. ரக துப்பாககி உட்பட, 180க்கு மேற்பட்ட பெல்ஜியம் தயாரிப்பு எப் என். சி. தானியங்கித் துப்பாக்கிகளும்இரண்டரைலட்சத்திற்கும் மேற்பட்ட ரவைகளும் அடங்குகின்றன

## $2\frac{1}{2}$ மைல் ராணுவ வேலி அழிப்பு

## கட்டைக்காட்டில் கைப்பற்றிய ஆயுதங்கள்

கட்டைக்காட்டில் நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தின் ஆயுதக்கிடங்கொன்று கைப்பற்றப்பட்டு அங்கிருந்த அனைத்து ஆயுதங்களும் கைபபற்றப்பட்டன. இவ் ஆயுதக்கிடங்கிலிருந்த கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கி | 01 |
| ★ 50 கலிபர் மேலதிக சுடு குழல் | 01 |
| ★ 50 கலிபர் ரவைகள் | 19782 |
| ★ ஆர். பி. ஜி. | 01 |
| ★ ஆர். பி. ஜி ஸ்கோப் | 09 |
| ★ ஆர். பி. ஜி ஷெல் | 188 |
| ★ ஆர். பி. ஜி புறப்புலர் | 170 |
| ★ ஜி. பி. எம். ஜி | 01 |
| ★ மேலதிக சுடுகுழல் | 01 |
| ★ மவுண்ட் | 01 |
| ★ கிளினிங் செற் | 01 |
| ★ மினி மிரக எல். எம். ஜி | 02 |
| ★ மேலதிக சுடுகுழல் | 06 |
| ★ 40 எம். எம். கிரனைட் பிஸ்ரல் | 03 |
| ★ அதற்குரிய ஷெல் | 75 |
| ★ 60 எம். எம். மோட்டர் (அடித்தளத்துடன்) | 01 |
| ★ அதற்குரிய ஸ்கோப் | 02 |
| ★ 60 எம். எம். ஷெல் | 53 |
| ★ 60 எம் எம் பரா ஷெல் | 08 |
| ★ 5.56 ரவைகள் லிங்குடன் | 37,550 |
| ★ 5.56 ரவைகள் | 2,01,380 |
| ★ நடுத்தர ரவைகள் | 9375 |
| ★ ஆர்.சி.எல். 50 கலிபர் மகசீன் | 04 |
| ★ அதற்குரிய றூல் செட் | 01 |
| ★ ஆர்.சி.எல். ஸ்பொட் ரவைகள் | 53 |
| ★ ஸ்மோக் குண்டு | 46 |
| ★ கைக்குண்டு | 100 |
| ★ ஜே. ஆர். கைக்குண்டு | 74 |
| ★ எவ்.என்.சி றைபிள் கிறைனைட் | 18 |
| ★ 81 எம். எம். ஷெல் | 83 |
| ★ 81 எம். எம். ஷெல் பெரிது | 56 |
| ★ கிளைமோர் பெரிது | 02 |
| ★ கிளைமோர் சிறிது | 21 |
| ★ வயர் றோல் | 09 |
| ★ திரிகொழுத்தி | 21 |
| ★ பாதுகாப்புதிரி (றோல்) | 01 |
| ★ கே டெக்ஸ் ,, | 06 |
| ★ பயனைட் கத்தி | 57 |
| ★ பராலைட் | 23 |
| ★ டப்பி மைன்ஸ் | 213 |

ஆயுதப்போராட்டவரலாற்றில் என்றும் நிகழாத ஒரு மகத்தான இராணுவ சாதனையை புலிப் படைப் போராளிகள் நிலைநாட்டினர். இந்தத் தாக்குதலின் போது 50 கலிபர்,ஜி.பி.எம்.ஜி துப்பாக்கிகள்,190க்கும்அதிகமான தானியங்கிகள், இரண்டரைலட்சத்திற்கும்அதிகமான ரவைகள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இந்தப் பெரும் தாக்குதலில் மகளிர் படையணி இம்ரான் - பாண்டியன் படையணி, கடற்புலிகள் கூட்டாய் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நள்ளிரவு 11-55 மணிக்கு விடுதலைப்புலிகளின் விசேட படையணிகள் இத்தாக்குதலை ஆரம்பித்தன. விடுதலைப் புலிகள் மகளிர் படையணியும, இம்ரான்—பாண்டியின் விசேட படையணியும், கடற்புலிகளும் தொடக்கிய இத் தாக்குதல் சுமார் ஒரு மணித்தியாலம்வரை நீடித்தது. இதன் பின்னர் கட்டைக்காட்டு இராணுவ மினிமுகாமும், ஆயுதக் கிடங்கும் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன

இவ் ஆயுதக்கிடங்கில் இருந்து பெருமளவு நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன சிறிலங்கா இராணுவத்துடனான போரில் இவ்வளவு பெருந்தொகைஆயுதங்களை விடுதலைப் புலிகள் இதுவரை கைப்பற்றியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கி, ஜி பி. எம். ஜி. ரக துப்பாக்கி உட்பட, 180க்கு மேற்பட்ட பெல்ஜியம் தயாரிப்பு எப் என். சி. தானியங்கித் துப்பாக்கிகளும்இரண்டரைலட்சத்திற்கும் மேற்பட்ட ரவைகளும் அடங்குகின்றன

விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| ★ 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கி | — 01 | ★ 5.56 ரவைகள் லிங்குடன் | —37,550 |
| ★ 50 கலிபர் மேலதிக சுடு குழல் | — 01 | ★ 5.56 ரவைகள் | —2,01,380 |
| ★ 50 கலிபர் ரவைகள் | — 19782 | ★ நடுத்தர ரவைகள் | — 9375 |
| ★ ஆர். பி. ஜி. | — 01 | ★ ஆர்.சி.எல். 50 கலிபர் மகசின் | — 04 |
| ★ ஆர். பி. ஜி ஸ்கோப் | — 09 | ★ அதற்குரிய றால் செட் | — 01 |
| ★ ஆர். பி. ஜி ஷெல் | — 188 | ★ ஆர்.சி.எல். ஸ்பொட் ரவைகள் | — 53 |
| ★ ஆர். பி. ஜி புறப்புலர் | — 170 | ★ ஸ்மோக் குண்டு | — 46 |
| ★ ஜி. பி. எம். ஜி | — 01 | ★ கைக்குண்டு | — 100 |
| ★ மேலதிக சுடுகுழல் | — 01 | ★ ஜே. ஆர். கைக்குண்டு | — 74 |
| ★ மவுணட் | — 01 | ★ எவ்.என்.சி றைபிள் கிறைனைட் | — 18 |
| ★ கிளினிங் செற் | — 01 | ★ 81 எம். எம். ஷெல் | — 83 |
| ★ மினி மி ரக எல். எம். ஜி | — 02 | ★ 81 எம். எம். ஷெல் பெரிது | — 56 |
| ★ மேலதிக சுடுகுழல் | — 06 | ★ கிளைமோர் பெரிது | — 02 |
| ★ 40 எம். எம். கிரனைட் பிஸ்ரல் | — 03 | ★ கிளைமோர் சிறிது | — 21 |
| ★ அதற்குரிய ஷெல் | — 75 | ★ வயர் றோல் | — 09 |
| ★ 60 எம். எம். மோட்டர் (அடித்தளத்துடன்) | — 01 | ★ திரிகொழுத்தி | — 21 |
| | | ★ பாதுகாப்புதிரி (றோல்) | — 01 |
| | | ★ கே டெக்ஸ் ,, | — 06 |
| ★ அதற்குரிய ஸ்கோப் | — 02 | ★ பயனைட் கத்தி | — 57 |
| ★ 60 எம். எம். ஷெல் | — 53 | ★ பராலைட் | — 23 |
| ★ 60 எம் எம் பரா ஷெல் | — 08 | ★ டப்பி மைன்ஸ் | — 213 |
| ★ எவ். என். சி. தானியங்கித் துப்பாக்கி | — 180 | ★ டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடி | — 17 |
| | | ★ அலேட் மைன்ஸ் | — 02 |
| ★ எவ். என். சி. மகசின் | — 372 | ★ தொலைத் தொடர்பு சாதனம் | — 01 |
| ★ எவ். என். சி. ஸ்கோப் | — 03 | ★ தொலை நோக்கி | — 07 |
| ★ ஜி - 3 ரக துப்பாக்கி | — 01 | ★ மோட்டார் கிளினிங் செட் | — 04 |
| ★ மகசீன் | — 01 | ★ கமெரா | — 03 |
| ★ ரி - 56 - 2 ரக துப்பாக்கி | — 02 | ★ ரி. வி. | — 01 |
| ★ மகசீன் | — 45 | ★ தட்டச்சு இயந்திரம் | — 01 |
| ★ கோல்சர் | — 24 | ★ ஏ கே. எல். எம். ஜி. கோல்சர் | — 12 |
| ★ ரி-56—1 ரகதுப்பாக்கி | — 03 | ★ மில்ரி பெல்ட் | — 13 |
| ★ ரி-81 ரக துப்பாக்கி | — 05 | ★ மில்றி சப்பாத்து (சோடி) | — 108 |
| ★ எஸ். எல். ஆர் | — 02 | ★ றெயின் கோட் | — 55 |
| ★ மகசீன் | — 05 | ★ கிட்பாக் | — 80 |
| ★ சொடகண் | — 02 | ★ ஹெல்மெட் | — 25 |
| ★ சிகனல் பிஸ்டல் | — 03 | ★ தண்ணீர் கான் | — 50 |
| ★ நேடோ ரவைகள் (லிங்குடன்) | —18000 | ★ ஜெனரேட்டர் | — 03 |
| ★ எல்-3 ரவைகள் லிங்குடன் | — 9800 | ★ மரம் அரியும் இயந்திரம் | — 02 |

# $2\frac{1}{2}$ மைல் ராணுவ வேலி அழிப்பு மினி முகாம் முற்றாகத் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்த இரண்டரை மைல் நீளமான இராணுவ வேலி உட்பட மினிமுகாம் ஒன்றும் தாக்கி அழிக்கப்பட்டது,

இரவு 11.55 மணிக்கு மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமான தாக்குதலைத் தொடுத்தனர். சரியாக ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற உக்கிர தாக்குதலின் பின் முகாம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. மினிமுகாமிலிருந்த ஆயுதக் கிடங்கும் கைப்பற்றப்பட்டது. இதிலிருந்த பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை இரண்டரை மைல் நீளத்திற்கு அமைந்திருந்த காவலரண்களும் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டன. புலிகளால் கைப்பற்றப்பட்ட மினிமுகாம் பகுதியிலும், காவலரண் பகுதியிலும் அதிகாலை 5.00 மணிவரையும் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகள் பின்னர் முகாமையும், காவலரண்களையும் அழித்துவிட்டு அங்கிருந்து வெளியேறினர்.

# கனரக வண்டிகள் அழிப்பு இரு வாகனங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள்கட்டைக் காட்டில்மேற்கொண்டவெற்றிகரமான தாக்குதலில் மூன்று கனரக வாகனங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இரண்டு ராணுவத்தினரின் வாகனங்கள் புலிகளால்கைப்பற்றப்பட்டன

விடுதலைப்புலிகளால் இராணுவ மினிமுகாம்மீதும், காவலரண்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளையில் உதவிக்கு வந்த மூன்று கவசவாகனங்களில் இரண்டு கண்ணிவெடியில சிக்கி முற்றாக அழிந்தன. ஒன்று விடுதலைப் புலிகளின் தாங்கி எதிர்ப்பு ஏவுகணை மூலம் சேதமாக்கப்பட்டது.

இதேவேளை மினிமுகாமில் இருந்த லான்ட் ரூறாசர் வாகனம் ஒன்றும், நான்கு சுழல் சக்கர ட்ராக்டர் ஒன்றும் எதுவித சேதமுமின்றிப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## இறந்தோரை விமானங்கள் காவிச்சென்றன

(நமது நிருபர்)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதி இராணுவ மினிமுகாம்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது இறந்த, காயமடைந்த இராணுவத்தினரை காவிச் செல்லும் பணியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் ஈடுபட்டிருந்தன.

அதிகாலை முதல் சிறிலங்கா விமானப்படை விமானங்களின் நடமாட்டம் குடாநாட்டில் அதிகரித்துக் காணப்பட்டது நள்ளிரவு வேளை விடுதலைப் புலிகள் கட்டைக்காட்டு சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற் கொண்ட தாக்குதலின் போதுபடுகாயமடைந்தபெருந் தொகையான இராணுவத்தினரை ஆனையிறவிலிருந்து பலாலி இராணுவ முகாமிற்கும் பலாலியிலிருந்து அநுராதபுரம் மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளுக்கும் ஏற்றிச் செல்லும்பணியிலேயே இவை ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறதுஇவற்றுக்காக உலங்குவானூர்தி சீபிளேன் அவ்றோவிமானம் ஆகியன பயன்படுத்தப்பட்டன.

# 13 போராளிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கட்டைக் காட்டில் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் 13 வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இம் மாபெரும் சாதனைக்கு தங்களை அர்ப்பணித்த வேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

அருந்ததி (செல்லத்துரை சுமதி, விசுவமடு, முல்லைத் தீவு),

மங்கை [தர்சா] (சிவநாதன் பாமினி, சித்திரமேழி, இளவாலை),

சூரியகலா (அனந்தராசா சித்திரா, வட்டுக்கோட்டை),

மோகன்(செல்வராசா கதீஸ்வரன், படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவில்.)

பதுமன் (முத்துத்தம்பி குகதாஸ், நிலாவெளி, திருமலை).

உலகநம்பி (அடைக்கலம் விமலன், லோட்டன் றோட், மானிப்பாய்),

இளந்திருமாறன் (கந்தையா கிருபானந்தராஜா, ஊரெழு மேற்கு, சுன்னாகம்);

செல்லப்பன் (சுப்பிரமணியம் யோகேஸ்வரன், புங்குடு தீவு),

நகீரன் [சவுரிமுத்துதுரை, 24 மெலிஞ்சிமுனை, ஊர்காவற்றுறை],

தாமரைசகண்ணன் [மகேஸ்வரன், கனிசியஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்]

தமிழ்மணி (சொக்கலிங்கம் ரவீந்திரன் கிளிவெட்டி, மூதூர்)

இளமாறன் (சிறில் ஜெகன் வேளாங்கண்ணி வீதி, குருநகர்)

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்களை கீழேவைத்தாலே புலிகளுடன் பேச்சுவார்த்தை

## - புதுடில்லியில் பிரேமா தெரிவிப்பு

(டில்லி)

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தமது அரசு இப்போது எந்தவிதப் பேச்சு வார்த்தைகளையும் மேற்கொள்ள வில்லை என்றும், ஜனநாயக வழியில் இணைந்து கொள்ளத் தயாராக இருந்தமையினாலேயே முன்பு பேச்சு நடத்தியதாகவும், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா புதுடில்லி செய்தியாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கும், மற்றக் குழுக்களுடன் தேர்தலொன்றில் போட்டியிடுவதற்கும் ஒப்புக்கொண்டால் மட்டுமே விடுதலைப் புலிகளோடு எதிர் காலத்தில் பேச்சுக்கள் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாதத்தை சமாளிப்பதும், தலைவர் பிரபாகரனை ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக விசாரணைக்கு அனுப்புவதும் இரண்டு வெவ்வேறான விடயங்கள் என்று குறிப்பிட்டஅவர் விசாரணைக்கு அனுப்பும் விடயத்தில் எல்லா விதமான நடைமுறை விடயங்களும் பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

நரசிம்மராவ் அரசுடன் தமது அரசுக்கு நல்லுறவு இருப்பதாகவும், அகதிகளை அனுப்பும் விடயத்தில் இந்திய-இலங்கை அரசுகளுக்கிடையே உடன்பாடு இருப்பதாகவும் தெரிவித்தார்.

# இராணுவத்தைப் பொறுத்தவரை மோசமான மாதம்

## பி.பி.ஸி. விமர்சனம்

சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்த வரையில் சென்ற மாதம மிகமோசமான மாதமாக இருந்தது என்று பி. பி. ஸி. கூறுகின்றது.

புலிகள், படையினர் பட கொன்றைக் கைப்பற்றியது டன் பல பகுதிகளில் திடீர்த் தாக்குதலை நடத்தினார்கள் இந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### யாழோசையின் இசைவகுப்புகள்

புல்லாங்குழல், வயலின், ஓகன், கிற்றார் ஆகிய பாடங்கள் 05-10-1992 விஜய தசமி அன்று (திங்கள்) மாலை 4. 30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தொடர்பு:- "யாழோசை" 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (3282)

### ஆண்டு 6 அநுமதித் தேர்வு

ஆண்டு 5-ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அநுமதிப் பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 04-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3304)

### Your Watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.

(Opposite old Vihare)

(சி/5156)


## இன்று

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியின் மேற்தரக் கிளையில் வாணிவிழா இன்று சனிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. இன்றைய தினம் மாலை 2 00 மணிக்கு ஆரம்பமாகும் இவ்வாணி விழாவின் நிகழ்வுகள் திரு. இ. சுதாகரின் தேவாரத்துடன் ஆரம்பமாகின்றன. மேற்படி கிளையின் பிரதான முகாமையாளர் திருமதி க. துரைராஜா வரவேற்புரை நிகழ்த்துவார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் "நவராத்திரியின் மகிமை" பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

# பத்திரிகைகள் மீது கல்வி அதிகாரிகள் பாய்ச்சல்

(நமது நிருபர்)

நான் ஒரு தொழிற்சங்கவாதி அல்ல உங்களிடம் வாக்குக் கேட்க உங்களிடம் வாக்குக் கேட்பதற்காக நான் உங்களுக்கு இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுத்தரவில்லை. இந்தப் பிராந்தியத்தின் கல்விப்பணிப்பாளர் என்ற ரீதியிலேயே எனது கடமையைச் செய்துள்ளேன்.

இவ்வாறு புதன்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு பயிலுனர் ஆசிரியர் நியமனம் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்துகையில் யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர்கள் கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள் செஞ்சோலைப் பிரதிநிதி மற்றும் தொண்டர் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்ட இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்; இந்த நிரந்தர நியமனம் தொடர்பாக கல்விச் சேவை ஆணைக்குழுவினருடன் தொடர்பு கொண்ட போதும் அவர்கள் இங்கு நிலவும் யுத்தநிலைமையைக் காரணம் காட்டி தட்டிக் கழித்து வந்தனர்.

கடந்த செப்ரெம்பர் நாலாம் திகதி கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் இம்முறையும் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்காது அரசு தட்டிக் கழிக்குமானால் இவர்கள் அனைவரும் விரக்தியின் விளிம்பிற்கு தள்ளப்படுவர் இதனால் இவர்கள் புலியாக மாற வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதற்கு அரசே பொறுப்பாகும் எனத் தான் தெரிவித்ததாகவும் கூறினார்.

29-09-92 அன்றைய ஈழநாதம் பத்திரிகையில் தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் குளறுபடி எனும் தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அதிலென்ன குளறுபடியிருக்கிறதுஎன்று எனக்குப் புரியவில்லை. தொண்டர் ஆசிரியர் பட்டியலில் கோட்ட ரீதியாக வெளியிடப்பட்ட 1989 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தகுதியுடையவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பிரதிக்கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) துரை தியாகராசா உரையாற்றும்போது; தொண்டர் ஆசிரியர்ளை நிரந்தரமாக்குவதற்கு அன்றுமுதல் இன்றுவரை கல்வித்திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி விளக்கிக் கூறியதுடன் கல்வித்திணைக்களம் தன் கடமையை ஒழுங்காகச் செய்யும் என்றும் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுப்பது திணைக்களத்தின் வேலை அல்ல. இது தொடர்பான எந்த ஒரு செய்திகளையும் நாம் பத்திரிகைகளுக்கு வழங்கவில்லை. பத்திரிகைகள் பக்கசார்பாக செய்திகளை வெளியிடுகின்றன அவை உண்மை நிலையை தெளிவுபடுத்திய பின் செய்திகளை வெளியிடுவதில்லை என பத்திரிகைகளைச் சாடினார்.

தொடர்ந்து யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்க பொருளாளர் திரு. தயாநிதி உரையாற்றுகையில் கடந்த 18 மாதங்களாக நிரந்தர நியமனம் கிடைக்கும் என எதிர்பார்த்தும் கிடைத்தது ஏமாற்றமே. அதன்பின்னரே மறியல் போராட்டத்தினையும், கண்டன ஊர்வலங்களையும் நடத்தினோம் இறுதியாக எமது குழு கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேரடியாக பல தடவைகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம் பல தடவைகள் எமது உண்மை நிலைமைகளை எடுத்துக் கூறினோம். இதன்பின்னரே அவர்கள் எமக்கு நியமனம் வழங்குவதாக உறுதியளித்தார்கள்.

இப்பேச்சுவார்த்தையை நடாத்த எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். இதேவேளை நாம் தொடர்ந்தும் எமது சம்பளம் மற்றும் சேவைக்கால நிர்ணயம் ஆகியவை தொடர்பாக தொடர்ந்து போரா - வேண்டிய நிலையிலேயே இருக்கிறோம் எனக் கூறினார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில்ஏற்பட்ட குளறுபடிபற்றிய செய்தியை 29-09-1992 ஆம் திகதி ஈழநாதம் முன்பக்கத்தில் வெளியிட்டது தெரிந்ததே இதில் நியமனத்தில் நடத்தப்பட்ட குளறுபடி பெயர் விபரத்துடன் வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பான எந்தவிதமான ஒரு மறுப்பையும் இதுவரை கல்வித்திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம். மேலும் இக்குளறுபடிகள் பண்டத்தரிப்பு கோட்டத்திலும் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வூதியப் பணிகள் பிரதேச செயலகத்திடம் கையளிப்பு!

(கொழும்பு)

ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான பணிகள் நேற்று முன்தினம் முதல் பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத் திணைக்களத்தினால் இதுவரை காலமும் கவனிக்கப்பட்டு வந்த ஓய்வூதியம் தொடர்பான பணிகள் நேற்று முன்தினம் முதல் பிரதேச செயலகங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. சிவில் இளைப்பாற்று சம்பளம், கைம்பெண் மற்றும் மரண சகாயப்படி என்பன இனிமேல் பிரதேச செயலகங்களினால் கவனிக்கப்படவுள்ளன.

## ஐ.நா.சபை அலுவலகம் வவுனியாவில் திறக்கப்பட்டது

ஐக்கிய நாடுகள் சபை உயர் ஸ்தானிகராலயத்தில் புதிய அலுவலகம் ஒன்று நேற்று வவுனியா குருமண்காடு பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யு.என்.எச்.சி. ஆர் எனப்படும் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் இவ் அலுவலகத் திறப்புவிழா காலை பத்து மணியளவில் நடைபெற்றது. இதில் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வெளிவாரி மாணவருக்கு 24-ம் திகதி வரவேற்பு

யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரி முதலாம் இரண்டாம் வருட மாணவர்களுக்கான பதிவும் வரவேற்பும் இம்மாதம் 24ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி அன்றையதினம் மாலை இரண்டு மணிக்கு முதலாம் வருட மாணவர்களுக்கும் மூன்று மணிக்கு இரண்டாம் வருட மாணவர்களுக்கும் பதிவும் வரவேற்பும் நடைபெறவுள்ளன.

## கூட்டுறவு லொறிகளிலும் இராணுவம் பற்றரி பறிமுதல்

(வவுனியா)

வடபகுதி நோக்கிவரும் கூட்டுறவுச் சங்க லொறிகளின் பற்றரிகளைக் கூட இராணுவத்தினர் கைப்பற்றுகின்றனர் என்று கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் வேதனையுடன் தெரிவித்தார்.

இந்த லொறிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு டீசலே தாங்கியில் இருப்பதற்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது இதனால் உரிய இடங்களுக்குச் செல்வதற்கு சிரமமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## நவராத்திரி விழா

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ்மாமன்றம் நடாத்தும் நவராத்திரி விழா எதிர்வரும் 5ஆம்திகதி திங்கட்கிழமை காலை இருபாலையில் நடைபெறவுள்ளது.

நவராத்திரியையொட்டிச் "சக்தி வழிபாடு" என்னும் தலைப்பில் பேச்சுப் போட்டியும், "சகலகலாவல்லி" மனனப்போட்டியும் மன்றத்தினால் நடாத்தப்படவுள்ளது என மன்றக் காப்பாளர் இருவை கவிஞர் திரு. எஸ். கே. ஜீவமோகன் தெரிவித்துள்ளார் யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் இப் போட்டிகள் நடைபெறவுள்ளன என அவர் கூறியுள்ளார். (24)

★

பாரதி இளைஞர் அறிவியற் கழகத்தின் ஆன்மீகப் பிரிவினால் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நவராத்திரி விழா கொண்டாடப்படவுள்ளது.

★

(பருத்தித்துறை)

இலங்கை சைவமன்றத்தின் நவராத்திரி விழா 4-ம்திகதி பருத்தித்துறை பார்வதவர்த்தனி கலாமண்டபத்தில் சைவ மன்றத்தலைவர், பேராசிரியர், வி.க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை சிவன் தேவஸ்தானபிரதமகுரு சிவஸ்ரீ. தா. வாசுதேவக்குருக்களின் அருளுரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.ச. முருகேசபிள்ளை பிரதமவிருந்தினராகவும், சட்டத்தரணி இ. உருத்திரா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி "கலைமகள்" பற்றி சொற்பொழிவற்றுவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (25)

## இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளையில் மகளிர் பொற்கணக்கு

இலங்கைவங்கி பருத்தித்துறைக் கிளை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைக்கப்படவுள்ள விசேட கருமபீடத்தில் மகளிர் பொற்கணக்கு அறிமுகவிழாவை இம்மாதம் 5-ம் திகதிநடாத்துகின்றது

இலங்கைவங்கி பருத்தித்துறைக்கிளைத் தலைவர் திரு.வி. தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிலே யாழ்ப்பாண இலங்கைவங்கி பதில் பிரதேச முகாமையாளர் திருமதி க துரைராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வங்கியின் கருமபீடத்தை ஆலயதர்மகர்த்தா சபைப் பதில் தலைவர்திரு.ச.தேவதாசன் திறந்துவைப்பார். திருமதி சா. தேவதாசன் முதலாவது மகளிர் பொற்கணக்கை ஆரம்பித்துவைப்பார் இவ்விழாவிலே பிரதேச செயலர் திரு.சி. முருகேசபிள்ளை, மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை, பிரதிக்கல்விப்பணிபாளர் திரு.ச.செல்லத்துரை, பட்டயக கணக்காளர் செல்வி த. சித்ரா அருள்நந்தி ஆசிரியக்கல்வி ஆலோசகர் செல்வி அ. கனகரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள் (25)


## ஓராண்டு ஆனதோ?

வீரஜனனம்

14 - 03 - 1969

வீரச்சாவு

15 - 10 - 1891

மேஜர் ஸ்ரீ மாஸ்ரர்




## மட்டக்களப்பு வயல்களில் வேளாண்மைக்கு புதிய தடை

(மட்டக்களப்பு)

களில் வேளாண்மை செய்ய

தில் படுவான்கரை பக்கமாக ... முதல் மண்டூர்.

ஆரம்பமாகின்றன. மேற்படி கிளையின் பிரதான முகாமையாளர் திருமதி க. துரைராஜா வரவேற்புரை நிகழ்த்துவார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் "நவராத்திரியின் மகிமை" பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

பிற்கு தள்ளப்படுவர் இதனால் இவர்கள் புலியாக மாற வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதற்கு அரசே பொறுப்பாகும் எனத் தான் தெரிவித்ததாகவும் கூறினார்.

29-09-92 அன்றைய ஈழநாதம் பத்திரிகையில் தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் குளறுபடி எனும் தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்

என. (25)

# பருத்தித்துறை கிளையில் மகளிர் பொற்கணக்கு

இலங்கைவங்கி பருத்தித்துறைக் கிளை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைக்கப்படவுள்ள விசேட கரும பீடத்தில் மகளிர் பொற்கணக்கு அறிமுகவிழாவை இம்மாதம் 5-ம் திகதிநடாத்துகின்றது

இலங்கைவங்கி பருத்தித்துறைக்கிளைத்தலைவர் திரு.வி. தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிலே யாழ்ப்பாண இலங்கைவங்கி பதில் பிரதேச முகாமையாளர் திருமதி க. துரைராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வங்கியின் கருமபீடத்தை ஆலயதர்மகர்த்தா சபைப் பதில் தலைவர்திரு.ச.தேவதாசன் திறந்துவைப்பார். திருமதி சா. தேவதாசன் முதலாவது மகளிர் பொற்கணக்கை ஆரம்பித்துவைப்பார் இவ்விழாவிலே பிரதேச செயலர் திரு.சி. முருகேசபிள்ளை, மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை, பிரதிக்கல்விப்பணிபாளர் திரு.ச.செல்லத்துரை, பட்டயக கணக்காளர் செல்வி த. சித்ரா அருள்நந்தி ஆசிரியக்கல்வி ஆலோசகர் செல்வி அ. கனகரட்ணம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள் (25)

# மட்டக்களப்பு வயல்களில் வேளாண்மைக்கு புதிய தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வயல் நிலங்களில் சொந்தக்காரர்களின் எழுத்து மூலமாக அங்கீகாரமின்றி வெளியார் யாரும் வேளாண்மை செய்யக் கூடாது என்றும் இந்த உத்தரவு கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது என்றும் மட்டக்களப்பிலுள்ள சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

வயல் சொந்தக்காரர்களே கூடுமானவரை தமது வயல்களில் வேளாண்மை செய்ய வேண்டும் என்றும் வேறு யாருக்காவது வயல்களை வேளாண்மைக்கு ஒப்படைப்பதானால் அதற்கான அங்கீகாரத்தை எழுத்து மூலம் வழங்க வேண்டும் என்றும்,

இதனை மீறி யாராவது வேளாண்மை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராகப் 'பல வழிகளிலும்' தண்டனை வழங்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை பக்கமாக வாகனேரி முதல் மண்டூர், தம்பலவத்தை வரை ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 700 ஏக்கர் வயல் நிலங்கள் உள்ளன. இதில் மூன்றில் ஒரு பகுதி முஸ்லிம்கட்குச் சொந்தமான வயல்களாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நெல் விதைக்கும் காலம் அண்மித்துள்ளபடியாலேயே சிறிலங்கா இராணுவத்தினர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விதை உருளைக்கிழங்கு அடுத்தமாத இறுதியில்வரும்

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கைக்கான விதை உருளைக்கிழங்கு அடுத்தமாத இறுதிக்குள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்திற்குத் தேவையான விதை உருளைக்கிழங்கிற்கான பெறுமதியின் ஐம்பது வீதமான பணத்தை அனுப்பி வைக்கும்படி யாழ். அரசாங்க அதிபரிடம் அத்தியாவசிய சேவைகள் பிரிவு கேட்டுள்ளது. கமநல சேவைத் திணைக்களத்தின் மூலமாக விவசாயிகளிடம் சேகரிக்கப்பட்ட பணம் அனுப்பிவைக்கப்பட்டதும் விதை உருளைக்கிழங்கு கப்பல்மூலமாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது (க)

# ஓராண்டு ஆனதோ?

வீரஜனனம்

14 - 03 - 1969

❋ ❋

வீரச்சாவு

15 - 10 - 1891


**மேஜர்**
**ஸ்ரீ மாஸ்ரர்**
[கனகராசா ஸ்ரீதரன்]



புதுவை பூத்த மகனே! பூமி காதத வீரனே
தோன்றிற் புகழுடன் தோன்றுக என்னும்
அருமொழிக் கிணங்க அமைந்த ஸ்ரீ தரனே
அகலா விளக்கே! அகன்றுதான் ஓராண்டானதோ?
விடுதலைக்கு நரபலியா? வீரா இன்று உன்உயிரை
விதைத்தாயா? தமிழுக்கு, ஆனையிறவு முகாம்மீது
ஓடிவந்து உன்அழகைக் காட்டிவிட்டுச் சென்றாயே
எமைமறந்து செல்வதற்கு எப்படி மனம் வந்ததையோ?
வீரா! உனைப் பிரிந்தேங்கும் குடும்பத்தோர் நாம்என்றும்
ஆறாத் துயர்தனில் அலறுகிறோம் ஆறிடுமோ?

புத்தூர் மேற்கு — குடும்பத்தினர்
(சி- 5153)

# நூல் வெளியீட்டு விழா



காதோடு சொல்லிவிடு...

-மேஜர் பாரதி.

இந்நூல்,
தன் உள்ளத்து உணர்வுகளை எமது தேசத்தின் காதோடு சொல்லிவிட வேண்டும் என்று துடித்த மேஜர் பாரதியின் எண்ண அலைகளின் தொகுப்பு.

இடம்: விக்னேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி
காலம்: 1992-10-07 மாலை 5மணி.
நிகழ்ச்சிகள்: நூல் அறிமுகம்
வெளியீட்டுரை
சிறப்புரைகள்
ஆய்வுரைகள்

தொடர்ந்து மேஜர் பாரதியின் எண்ணத்தில் கருக்கொண்ட

## சீதன அம்புகள்

நாட்டிய நாடகம் இடம்பெறும்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு

(சி-5150)

1993 ஆம் ஆண்டுக்கான

# வரவு செலவு சட்டமூலம் செவ்வாய் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

சிறிலங்காவின் அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட சட்ட மூலம் செவ்வாய்க்கிழமையன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும், வெளிநாட்டுக் கடனுதவியாக 3500 கோடி ரூபா கிடைக்கும் என்றும் தெரிய வருகிறது.

பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜயதுங்கா செவ்வாயன்று பாராளுமன்றம் கூடும் போது 1993 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என்றும் மேலும் தெரிய வருகிறது.

# கலைப்பீட விரிவுரைகள் 14இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக 91/92 கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் இம்மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகின்றனஇவை2ஆம், 3ஆம்,4ஆம் வருட மாணவர்களுக்கே மேற்படி தினத்தில் விரிவுரைகள் ஆரம்பமாகும் எனவும் முதலாம் வருடமாணவர்களுக்குகான விரிவுரைகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் பெயர் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்ட பின்னரே ஆரம்பமாகும் எனதெரிவிக்கப்படுகிறது.

# உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் உதை பந்தாட்ட லீக் விளையாட்டுக் கழகங்களுக்கிடையேநடத்திய உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் பாஷையூர் புனித அன்ரனீஸ் கழக அணியை எதிர்த்து ஆடும். புனித பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் அதிபர் வண. பிரான்சிஸ் யோசப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

# நினைவு கூருகின்றோம்... 1992 - 10 - 03

1986-ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர்காவற் படையினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 20 தமிழர்கள்.

1988-ஆம் ஆண்டு யாழ். அச்சுவேலிப்பகுதியில் தேச விரோதசக்திகளினால் சுடுக்கொல்லப்பட்ட கதிரிப்பாயைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1989-ம் ஆண்டு அம்பாறை-கல்முனை பாண்டிருப்புப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

லெப்.பாலன் (சிவலிங்கம் நவலோகப்பிரகாஷ் பாண்டிருப்பு -02 கல்முனை-அம்பாறை)

1990-ம் ஆண்டு யாழ்-தொண்டமானாற்றுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எம்மைப்பிரிந்த-

ரவாஸ் (குமரகுரு ஜெயராசா-இன்பருட்டி அல்வாய் வடக்கு பருத்தித்துறை-யாழ்)

1991 ஆம் ஆண்டு மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த

பவா (இராஜேந்திரன் வெள்ளையன் - ஸ்கந்தபுரம் கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5155)

**சிந்தனைக்கு**

மானத்திற்காக அனைத்தையும் பணயம் வைக்கும் வீர தியாக உணர்வு கொண்ட ஆன்மாக்கள் ஒரு சிலர் தான் சுதந்திரத்தை எப்பொழுதுமே போராடிப் பெறுவர்.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்-03- 10 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் - 05

## இராணுவத் தீர்விற்கு ஓர் பேரிடி

கூட்டடக்காட்டில் மிகப்பாதுகாப்பெனக் கருதப்பட்ட பகுதியில் இருந்த இராணுவ மினிமுகாமையும் அதனுடனிருந்த ஆயுதக்கிடங்கையும் இரண்டரை மைல் நீளமான இராணுவ வேலியையும் விடுதலைப்புலிகள் தாக்கி அழித்ததோடு, பெரும் எண்ணிக்கையான நவீன ரக ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். ஒரே தாக்குதலில் 200க்கு மேற்பட்ட தானியங்கி ஆயுதங்களையும் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட ரவைகளையும், மேலும்பல இராணுவத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியமை விடுதலைப் புலிகளின் இராணுவ வரலாற்றில் மாபெரும் சாதனையாகும். இதே வேளை சிறிலங்கா இராணுவ வரலாற்றில் அதன் இராணுவ தந்திரோபாயத்திற்கு விழுந்த மாபெரும் அடி என்பதிலும் சந்தேகமெதுவுமில்லை.

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் போர்யுக்திகள் சிறிலங்கா இராணுவத்திற்குப் பேரிழப்புக்களை ஏற்படுத்திவருகின்றது. இதன்காரணமாக வடக்கு கிழக்குப் போர்முனைகளில் சிறிலங்கா இராணுவம் வெற்றிகரமான போர்யுக்தியை வகுத்துக் கொள்ள முடியாது பெரும் அவலநிலைக்கு உள்ளாகியுள்ளது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், கிழக்கை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக அறிவித்த சிறிலங்கா இராணுவம் அங்கு நூற்றுக்கணக்கில் இராணுவ முகாம்களை அமைத்தது முகாம்களுக்கு இடையில் ரோந்துப் பணிகளை நடத்தியது. ஆனால், விடுதலைப் புலிகள் இவ் ரோந்து அணிகள் மீது நடத்திய 'மின்னல்வேக அதிரடிகள்' இவ் இராணுவ தந்திரோபாயத்தையே கேள்விக்குள்ளாக்கியது. புலிகளின் அபார தாக்குதல் திறனையும், சலிப்பின்றி வேவு பார்க்கும் திறனையும் மனவுறுதியையும், சிங்கள தரப்பினரால் கூடப்பாராட்டாமல் இருக்க முடியவில்லை புலிகளின் அதிரடித்தாக்குதல் நிகழும் ஒவ்வொரு வேளைகளிலும் இராணுவ தந்திரோபாயங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவம் அறிவித்துவந்தது ஆனால், இராணுவத்தால் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பிக்கவோ, தந்திரோபாயத்தில் வெற்றிபெறவோ முடியவில்லை இரா

# நெடுங்கேணி இந்திய ராணுவ மினி முகாம்:
# புலிகள் தாக்கி நிர்மூலமாக்கிய வரலாறு

**(5)**

அவர்களை நோக்கி கத்தியபடி ஓடினேன். இதனை எதிர்பாராது திகைத்து நின்ற இந்தியப் படையினர் தம்மைச் சுதாகரிக்க முன்னர் இரண்டு எஸ். எல். ஆர். துப்பாக்கிகளையும் எனது இரண்டு கால்களால் மிதித்தபடி எல். எம் ஜியை இறுகப் பற்றினேன். சில விநாடிக்குள் நடந்துவிட்ட எனது எதிர்பாராத தாக்குதலால் நிலை குலைந்த அவர்கள் அடுத்த நடவடிக்கை குறித்து எண்ணுமுன்னர் எனது கையில் இருந்த கைக்குண்டின் லிவரை அவர்கள் முன் பிடித்துக் கொண்டு மெதுவாகக் கைவிட்டேன்.

குண்டு வெடிக்கப் போகின்றது என்பதைக் கண்ட அவர்கள் மேலும் நிலைகுலைந்தனர். குண்டுடன் இருந்த கையால் தோளில் தொங்கிய துப்பாக்கியை எடுத்து அவர்களைச் சுட்டேன் குண்டு கையில் இருந்ததால் சூடு தவறி எல். எம். ஜி மீது பட்டது. ஒருவனைக் காயப்படுத்தியது. இந்தியப் படையினர் முற்றாக நிலைகுலைந்து நின்றனர். இந்த இடைவெளியில் குண்டைத் தூர எறிந்தேன். பின் அவர்களைச் சுட்டுக் கொன்றேன்.

அப்போது அவர்கள் பின்னால் அதுவரை எஸ் எம். ஜி யுடன் பயந்து படுத்திருந்த இந்தியச் சிப்பாய் ஒருவன் எழுவதைக் கண்டேன். அவனையும் சுட்டு வீழ்த்தினேன். இவ்வளவு நிகழ்ச்சியும் சில விநாடிக்குள் நடந்து முடிந்துவிட்டது அவர்களது ஆயுதங்களைக் கைப்பற்றினேன்.

நான் வீசிய கைக்குண்டு வெடிக்காததால் அதனை நோக்கிச் சென்றேன் அக்கைக்குண்டோ மழையில் நனைந்தபடியினால் பழுதடைந்து இருந்தது இதனாலேயே அக்கைக்குண்டு வெடிக்கவில்லை. இவ் வெடிக்காத கைக்குண்டினால் தான் அம் முகாமின் முக்கிய காவலரண் ஒன்றில் இருந்த இந்திய சிப்பாய்களை பயமுறுத்தி அவர்களது உயிர்களையும் ஆயுதங்களையும் பறிக்க முயன்றதை நினைத்து இப்போதும் ஆச்சரியப்படுவேன்.

பின்னர் நானும் எல்விற்ரனும் தங்கேசினுடைய பக்கம் சென்றோம் அங்கு அனைத்து காவலரண்களையும் அழித்துவிட்டு அங்கிருந்த சிப்பாய்களினது உடல்களை காவலரணிற்கு வெளியால்இழுத்து நிரையாக அடுக்கியபடி எமக்குரியது எல்லாம் கிளியர் பண்ணியாச்சா எனக் கேட்டுக் கொண்டே எங்களைப் பார்த்து சிரித்துக் கொண்டு நின்றார் தங்கேஸ்

பின்னர் நாங்களும் தங்கேசினுடையசிலபேருமாக கந்தனுடைய பக்கம் சென்றோம். அங்கு காந்தனும், தேவனும், கைகளில் காயமடைந்த நிலையில் இராணுவத்திடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களுடன் நின்றனர்.

நாங்கள் கதைத்துக்கொண்டிருக்கும்போது எமது போராளிகள் எல்லோரும் முகாம் முற்றாக கைப்பற்றப்பட்டு விட்டதாக முழக்கமிட்டு கத்தியவண்ணம் என்னை நோக்கி ஓடிவந்தார்கள். அவர்களிடம் அகப்பட்டால் என்னை தூக்கி தோளில் வைத்து சந்தோசத்தில்கத்தி ஆரவாரம் செய்வார்கள் என்பதனால் நானும் தங்கேசும் அருகில் இருந்த கட்டடங்களுக்குள் ஓடி ஒளிக்க எத்தனித்தோம் ஆனால் தப்பிக்க முடியவில்லை.

அந்நேரம் சந்தைப்பக்கமாக நின்ற போராளி ஒருவர் சுட்டபடியே ஆமிக்காரன் ஓடுகிறான் என உரக்க கூவி எங்களை அழைத்தான். உடனடியாக அந்த இடத்திற்கு ஓடிச்சென்ற நாங்கள் சுமார் 8 பேர் அச்சிப்பாயை நோக்கிச் சுட்டோம். ஆனால் ஒருவரது குண்டும் அச்சிப்பாயை தாக்கவில்லை அவன் அருகில் இருந்த பிரதானமுகாமிற்கு தப்பிச் சென்று விட்டான்.

இரண்டு மூன்று சிப்பாய்கள் இத்தாக்குதலின் போது தமது துப்பாக்கிகளை தூர வீசிவிட்டு முகாமிற்குள் குறுக்கும் நெடுக்குமாக எமது போராளிகளிடம் அகப்படாமல் ஓடித் திரிந்தனர் இவர்களை எமது போராளிகளும் பின்னால் துரத்தித்தான் பார்த்தார்கள் ஆனால் பிடிக்கமுடியவில்லை. ஏனெனில் இவர்களை சுட்டால் உடனே குறுக்காக நடமாடித்தாக்கும் எமது போராளிகளையும் தாக்கக் கூடும் என்பதனால் சுடாமலேயே துரத்திப் பிடிக்க எத்தனித்தனர். இவர்கள் துரத்தப்படும் போது எமது போராளிகளுடன் இராணுவத்தினர் ஒரு சில சமயங்களில் மோதுப்பட்டு விழுந்ததுண்டு. பின்னர் இவர்கள் முட்கம்பி வேலியை தாண்டும் போது சுட்டு வீழ்த்தப்பட்டனர். இவர்கள் துரத்துப்படுவதை பார்த்தால் சிறுவயதில் அடித்து தொட்டு விளையாடுவது போல உள்ளதாக தங்கேஸ் கூறிச்சிரித்தார்.

பின்னர் நவத்தை எம்மிடம் வரும்படி வோக்கியில் கூறிவிட்டு நாங்கள் காவலரண்களையும் பார்ப்பதற்குச் சென்றோம். அங்கு இருந்த இராணுவத்தினரின் உடல்கள் அனைத்தையும் ஓரிடமாக அடுக்கிவிட்டு கைப்பற்றிய ஆயுதங்களையும் ஓரிடமாக அடுக்கி கணக்குப் பார்க்கத் தொடங்கினோம்.

அதேவேளை நவமும் வந்து எம்முடன் சேர்ந்து கொண்டார் 11 நிமிடங்களே நடந்த எமது தாக்குதலைப் பற்றி பாராட்டிவிட்டுகாயக்காரரை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டார்.

அப்போது பிரதான முகாமில் இருந்து நாம் கைப்பற்றிய மினிமுகாமை நோக்கி இராணுவத்தினர் பெரிதாக படையெடுத்தனர் எனது காயத்திற்கு கட்டுப்போட்டுக் கொண்டு; கைப்பற்றிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நாம்கைப்பற்றியமினிமுகாமை விட்டு போராளிகள் அனைவரையும் கூட்டிக்கொண்டுவெளியேறும்படி நவத்திடமும் தங்கேசிடமும் கூறிவிட்டு நானும் எல்விற்ரனும் 10 போராளிகளுடன் முன்னேறும் இராணுவத்தினருடன் போரிடச்சென்றோம்.

நெடுங்கேணி சந்தியில் வைத்து முன்னேறிய இராணுவத்தினரை வழிமறித்து தாக்கினோம் ½மணி நேரம் இடைவிடாது தாக்கி இராணுவத்தினரின் முன்னேற்றத்தினை தடுத்தோம். பின்னர் எம்மை தாக்குதலை இடை நிறுத்திவிட்டு அவ்விடத்தில் இருந்து பின்வாங்கும்படி நவத்திடம் இருந்து கட்டளை வந்தது. நாங்கள் வந்த காரியம் வெற்றிகரமாக முடிந்ததனால் நாமும் உடனடியாக பின்வாங்கினோம்

இத்தாக்குதலில்; மினி முகாமில் 19 இராணுவத்தினரும், உதவிக்கு வந்தவர்களில் 03 இராணுவ வீரர்களும் மொத்தம் 22 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

28 இராணுவத்தினர் உள்ள மினி முகாமில் தாக்குதல் நடாத்துவதற்கு முக்கால் மணி (45 நிமிடம்) நேரத்திற்கு முன்பாகத்தான் 8 இராணுவத்தினர் வவுனியா பிரதான வீதியில் ரோந்து சென்றனர். இதனால் இவர்கள் இத்தாக்குதலில் அகப்படவில்லை.

ஆனால் அத்தாக்குதலில் சற்றும் எதிர்பாராத விதமாக பிரதான முகாமில் இருந்து முன்னேறிவந்த இராணுவத்தினரை வழிமறித்து தாக்கும் போது அவர்களது 60 mm மோட்டர் செல் ஒன்று நவத்திற்கு மிகவும் அருகில் விழுந்ததால் நவம் காயமடைந்தார்.

லெப். கேணல் நவத்திற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரியாத மக்களே கிடையாது. அங்குள்ள ஒவ்வொரு ஊரின் ஒழுங்கையும் மணலாற்றுக் காட்டில் உள்ள மரங்களும் நவத்திற்கு மிகவும் பழக்கமானவை

தவறுதலான ஒரு விபத்தில் தன் ஒரு கையின் முன் பகுதியை இழந்த அவர் என்றுமே போராட சளைத்ததில்லை.

மணலாற்றில் அவரில்லை என்றால் எம்மால் நிலை கொண்டிருக்க முடியுமா என்பது சந்தேகமே.

எல்லாவற்றிற்கும் மேலாக எம் தலைவரின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அரணாக அவர் இருந்தார்.

மிகப்பெரிய வீரரும் உழைப்பாளியுமான அவர் இந்தியா கொண்டுசெல்லும் வழியில் வீரமரணமடைந்தார்.

(முற்றும்)

> நெடுங்கேணி பாடசாலை இந்திய இராணுவ மினிமுகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த சம்பவத்தை இத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கிச் சென்ற முன்னாள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவின் தளபதியான மேஜர் கிண்ணி விபரிக்கிறார். இவர் 10-07-92இல் இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டவராவார்.

# ஆப்கான் கெரில்லாக்கள்
# காஷ்மீருக்குள் ஊடுருவல்

(டில்லி)

பாபர் மசூதி - இராமர் ஜென்மபூமி விவகாரம்

## சிந்தித்து வைக்கப்பட்ட தீர்வு இந்திய அரசிடம் இல்லை

- எஸ். பி. சவான் அறிவிப்பு

புதுடில்லியில் இன்றுபாபர்

கொள்ள முடியாது பெரும் அவலநிலைக்கு உள்ளாகியுள்ளது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர், கிழக்கை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக அறிவித்த சிறிலங்கா இராணுவம் அங்கு நூற்றுக்கணக்கில் இராணுவ முகாம்களை அமைத்தது முகாம்களுக்கு இடையில் ரோந்துப் பணிகளை நடத்தியது. ஆனால், விடுதலைப் புலிகள் இவ் ரோந்து அணிகள் மீது நடத்திய 'மின்னல்வேக அதிரடிகள்' இவ் இராணுவ தந்திரோபாயத்தையே கேள்விக்குள்ளாக்கியது. புலிகளின் அபார தாக்குதல் திறனையும், சலிப்பின்றி வேவு பார்க்கும் திறனையும் மனவுறுதியையும், சிங்கள தரப்பினரால் கூடப்பாராட்டாமல் இருக்க முடியவில்லை புலிகளின் அதிரடித்தாக்குதல் நிகழும் ஒவ்வொரு வேளைகளிலும் இராணுவ தந்திரோபாயங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவம் அறிவித்துவந்தது ஆனால், இராணுவத்தால் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பிக்கவோ, தந்திரோபாயத்தில் வெற்றிபெறவோ முடியவில்லை இராணுவத்தினர் பெருமளவில் கொல்லப்படுவதையோ, அவர்கள் மனநிலை பாதிக்கப்படுவதையோ அவர்களால் தடுக்கமுடியவில்லை.

இதே வேளை, வடக்கில் கிழக்கைப் போன்றல்லாது இராணுவ வேலிகளை அமைப்பதன் மூலம் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும், யாழ்பாணக் குடாநாட்டை முற்றுகை இடுவதும் இராணுவத்தின் பிரதான தந்திரோபாயமாக இருந்தது இதன் அடிப்படையில் பலமைல் நீளத்திற்கு காவலரண்களும் இடைஇடையே மினிமுகாம்களும் அமைக்கப்பட்டன. ஆனால், இத் தந்திரோபாயம அண்மைக்காலத்தில் புலிகளின் தொடர் காவலரண்கள் மீதான தொடர்ச்சியான அதிரடி தாக்குதலினால் பெரும் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. பெரும் இழப்புகளை ஏற்படுத்தும் ஒன்றாகவும் மாறியுள்ளது.

கடந்த மாதத்தின் தொடக்கத்தில் வவுனியா காவலரண்கள் மீது மேற்கொண்ட தாக்குதலினால், சிங்கள குடியேற்றங்களை இராணுவப் பாதுகாப்புடன் நிறுவும் திட்டம் பெரும் கேள்விக்குரியதாகியுள்ளது இராணுவ நிலைகள் மீது புலிகள் மேற் கொள்ளும் தாக்குதலின் போது, இராணுவத்தினர் தப்பி ஓடுவது சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு இராணுவத்தின் மீதிருந்த நம்பிக்கையும் சிதைத்துள்ளது அதாவது இராணுவ நோக்கத்தில் ஒன்று தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த இருபத்திஐந்தாம் திகதி விடுதலைப் புலிகள் பூநகரி இராணுவமுகாம் காவலரண்கள் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது ஒன்றரைமைல் நீளமான தொடர் காவலரண்களைத் தாக்கி அழித்ததும், நேற்று நள்ளிரவு, கட்டைக்காட்டு இராணுவ வேலியை தாக்கிச் சிதறடித்ததும் இராணுவத்தின் தந்திரயோபாயத்திற்கு கிடைத்த மற்றுமொரு படுதோல்வியாகும்.

இவ்வாறாக வடக்கிலும், கிழக்கிலும் இராணுவத்தந்திரோபாயத்திற்குகிடைத்த தோல்வியானது இராணுவ ரீதியாக புலிகளை வெற்றி கொள்வது என்பதற்கும், வடக்குகிழக்குப்பகுதியை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல் என்பதுமான இராணுவத்தின் திட்டத்திற்குக் கிடைத்த பலத்த அடியாகும். வடக்கு - கிழக்கில் இராணுவம் மேல் நிலையை அடையமுடியாதுஎன்று அன்றுதெரிவித்த போது அதனை ஏற்றுக்கொள்ளாத இராணுவ தரப்பும், சிங்கள அரசியல் வாதிகளும் இன்றாவது அது சாத்தியமாகாதவொன்றென உணர்ந்திருக்க வேண்டும் இதை அவர்கள் இன்னும் உணராது விட்டால் மேலும் மேலும் பேரதிர்ச்சிகளைக்கேட்பதைத்தவிர்க்கமுடியாது.

எழுவதைக் கண்டேன். அவனையும் சுட்டு வீழ்த்தினேன். இவ்வளவு நிகழ்ச்சியும் சில விநாடிக்குள் நடந்து முடிந்து விட்டது அவர்களது ஆயுதங்களைக் கைப்பற்றினேன்.

நான் வீசிய கைக்குண்டு வெடிக்காததால் அதனை நோக்கிச் சென்றேன் அக்கைக் குண்டோ மழையில் நனைந்தபடியினால் பழுதடைந்து இருந்தது இதனாலேயே அக்கைக் குண்டு வெடிக்கவில்லை. இவ் வெடிக்காத கைக்குண்டினால் முடியவில்லை.

அந்நேரம் சந்தைப்பக்கமாக நின்ற போராளி ஒருவர் சுட்டபடியே ஆமிக்காரன் ஓடுகிறான் என உரக்க கூவி எங்களை அழைத்தான். உடனடியாக அந்த இடத்திற்கு ஓடிச்சென்ற நாங்கள் சுமார் 8 பேர் அச்சிப்பாயை நோக்கிச் சுட்டோம். ஆனால் ஒருவரது குண்டும் அச்சிப்பாயை தாக்கவில்லை அவன் அருகில் இருந்த பிரதானமுகாமிற்கு தப்பிச் சென்று விட்டான்.

தப்பட்டனர். இவர்கள் துரத்துப்படுவதை பார்த்தால் சிறு வயதில் அடித்து தொட்டு விளையாடுவது போல உள்ளதாக தங்கேஸ் கூறிச்சிரித்தார்.

பின்னர் நவத்தை எம்மிடம் வரும்படி வோக்கியில் கூறிவிட்டு நாங்கள் காவலரண்களையும் பார்ப்பதற்குச் சென்றோம். அங்கு இருந்த இராணுவத்தினரின் உடல்கள் அனைத்தையும் ஓரிடமாக அடுக்கிவிட்டு கைப்பற்றிய

எல்விற்றனும் 10 போராளிகளுடன் முன்னேறும் இராணுவத்தினருடன் போரிடச்சென்றோம்.

நெடுங்கேணி சந்தியில் வைத்து முன்னேறிய இராணுவத்தினரை வழிமறித்து தாக்கினோம் ½மணி நேரம் இடைவிடாது தாக்கி இராணுவத்தினரின் முன்னேற்றத்தினை தடுத்தோம். பின்னர் எம்மை தாக்குதலை இடை நிறுத்தி விட்டு அவ்விடத்தில் இருந்து பின்வாங்கும்படி நவத்திடம்

மணலாற்றில் அவரில்லை என்றால் எம்மால் நிலைகொண்டிருக்க முடியுமா என்பது சந்தேகமே.

எல்லாவற்றிற்கும் மேலாக எம் தலைவரின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அரணாக அவர் இருந்தார்.

மிகப்பெரிய வீரரும் உழைப்பாளியுமான அவர் இந்தியா கொண்டுசெல்லும் வழியில் வீரமரணமடைந்தார்.

(முற்றும்)

# ஆப்கான் கெரிலாக்கள் காஷ்மீருக்குள் ஊடுருவல்

(இஸ்லாமாபாத்)

ஆப்கான் யுத்தத்தில் கலந்து கொண்ட அராபிய கெரிலாக்கள் காஷ்மீரில் இந்திய ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களின் போராட்டத்தில் சேர்ந்திருப்பதாக பாகிஸ்தானிலுள்ள தீவிரவாதிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இவ்வாறு ஊடுருவியவர்களின் எண்ணிக்கை நூறாகவோ அல்லது ஐம்பதாகவோ கூட இருக்கலாம் என ஹெய் உல் முஜ ஹிதீன் குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை 300 முதல் 400 வரையிலான அராபியக் கெரிலாக்கள் காஷ்மீருக்குள் புகுந்திருப்பதாகவும், 200 ஆப்கானிஸ்தானியர் கடந்த ஆண்டு அங்கு சென்றிருப்பதாகப் பாகிஸ்தானிலுள்ள 'டான்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவர் இந்தியக் காஷ்மீருக்குள் புகுந்திருப்பதனை தாங்கள் மறுக்கவில்லையென்றும் ஆனால் அந்த எண்ணிக்கை அதிகமாக இல்லையென்றும் இந்தியக் காஷ்மீருக்குள் கொண்டு செல்வது அபாயமானது என்றும் முஜாகுதீன் குழுவைச் சேர்ந்த அதிகாரி மசூத தெரிவித்துள்ளதுடன் காஷ்மீர் எல்லையைக் கடப்பது ஆப்கான் எல்லையைக் கடப்பதனைவிட மிகக் கஷ்டமானது எனவும் தெரிவித்தார்,

ஆப்கான் யுத்தத்தில் இஸ்லாமிய கெரிலாக்களின் வெற்றிக்கு உதவிய ஆயிரக்கணக்கான தீவிர அராபியர்கள் காஷ்மீரில புதிய வாய்ப்பைத் தேடி வருவதாகக் காஷ்மீர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இதே வேளை எதிர்வரும் ஐந்தாம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துமாறு பாகிஸ்தானிய மக்களை ஜம்மு காஷ்மீர் விடுதலைமுன்னணித் தலைவர் அமானுல்லாகான் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அதே சமயம் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகளுக்கு இஸ்லாமாபாத் ஆயுத உதவி வழங்கி வருவதாக ராஜதந்திரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## இந்திய ஜனாதிபதிக்கு பிரேமதாசா அழைப்பு

(டில்லி)

இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை சிறிலங்காவுக்கு வருமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அழைப்பு விடுத்தார்

இலங்கையில் பௌத்தமதம் தொடங்கி 2300 -வது ஆண்டு விழாவையொட்டி அடுத்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்யுமாறே ஜனாதிபதி ஆர் பிரேமதாசா இந்திய ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்

## சட்டவிரோத தொழிற்சாலை தமிழகத்தில் கண்டுபிடிப்பு

(சென்னை)

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் சட்டத்திற்கு புறம்பான வகையில் இயங்கி வந்த துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலையொன்று தமிழகப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர் உட்பட நால்வர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட பொலிஸ் படையினர் நடத்திய திடீர் சோதனையின் போது ஐம்பது வெடிகுண்டுகள், ஐந்து நாட்டுத் துப்பாக்கிகள், மூன்று B10 ரிவால்வர்கள் என்பவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## துருக்கி நாசகாரி மீது அமெரிக்கா தாக்குதல்

(வாஷிங்டன்)

துருக்கி நாசகாரிக் கப்பலொன்று அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகியதால் அதிலிருந்த ஆறுபடையினர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதல் தவறுதலாக நடாத்தப்பட்ட தென அமெரிக்க கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## அமெரிக்கஜனாதிபதிதேர்தல் ராஸ்பெராஸ்போட்டியிடுவார்

அமெரிக்காவின்மிகப்பெரும் செல்வந்தர்களில் ஒருவரான ராஸ் பெராஸ் அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாக மீண்டும் தெரிவித்துள்ளார்

செய்தியாளரிடம் பேசிய ராஸ் பெராஸ் மேலும் கூறுகையில், ஜீன் டஸ்க பருலர் துணை அதிபர் பதவிக்கு நிறுத்தப்படுவாரெனவும், ஐம்பது மாநிலங்களிலும் இருக்கும் தமது தொண்டர்களின் வேண்டுகோளை பேற்று தாம் போட்டியில் இறங்கப் போவதாகவும் கூறினார்.

இந்த அறிவிப்பை அடுத்து அமெரிக்கத் தேர்தல் களத்தில் குடியரசுக் கட்சியில் ஜோர்ஜ் புஷ், ஜனநாயகக் கட்சியில பில் கிளிண்டன் ஆகியோருடன் சுயேட்சை வேட்பாளராக ராஸ் பெராஸும் இருக்கின்றார்

அதிபர் தேர்தலில் தாம் வெற்றிபெற முடியாது என்பதால், போட்டியிலிருந்து ஒதுங்கப் போவதாக ராஸ் பெராஸ் கடந்த ஜூலையில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

பாபர் மசூதி - இராமர் ஜென்மபூமி விவகாரம்

## சிந்தித்து வைக்கப்பட்ட தீர்வு இந்திய அரசிடம் இல்லை

- எஸ். பி. சவான் அறிவிப்பு

(டில்லி)

பாபர்மசூதி ராமர் ஜென்மபூமி விவகாரம தொடர்பாக ஏற்கனவே சிந்தித்து வைக்கப்பட்ட தீர்வு எதுவும் அரசிடம் இல்லை என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

அகில இந்திய பாபர் மசூதி செயல் கமிட்டிக்கு அமைச்சர் சவான் எழுதியுள்ள கடிதத்தில் இதனைத் தெளிவாக விளக்கியிருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

புதுடில்லியில் இன்றுபாபர் மசூதி செயல் கமிட்டியினருக்கும விஷ்வ இந்து பரிஷத் தலைவர்களுக்குமிடையே நடைபெற இருக்கும் பேச்சுக்கள் பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்தப் பிரச்சினை குறித்தகருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள கூட்டம் வாய்ப்பு அளிக்கும் எனவும், இந்தக் கூட்டத்தின் போது ஏதாவது தீர்வு காணப்படலாம் என்று நம்பிக்கை இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## கனடாவில் ஹெலிவிபத்து; நான்கு பேர் உயிரிழப்பு

(ஒன்டாரியோ)

கனடாவின் பிரசித்திபெற்ற குதிரைலாட நீர்வீழ்ச்சியை பார்த்து ரசிக்க ஹெலிகொப்டரில் சென்றபோது அவை வானத்தில் ஒன்றோடொன்று மோதிய போது ஒரு ஹெலிகொப்டர் நொருங்கி வீழ்ந்ததால் நால்வர் கொல்லப்பட்டனர்.

இரண்டாவது ஹெலிகொப்டர் அருகில் உள்ள கார்நிறுத்தும் இடத்தில் இறங்குவதில் வெற்றி பெற்றது அதிலிருந்தவர்களுக்கு சிறிய காயங்களே ஏற்பட்டன.

நொருங்கியஹெலியிலிருந்த இரு ஆண்களும் இரு பெண்களும் கொல்லப்பட்டனர் அவர்களது சடலங்கள் மோசமாக சிதைந்து கிடந்தன.

அமெரிக்க--கனடா எல்லையில் உலகப் புகழ்பெற்ற நயகரா நீர்வீழ்ச்சி உள்ளது கனடா பகுதியில் உள்ள குதிரைலாட நீர்வீழ்ச்சி மிகவும் பிரபல்யம் பெற்றது

## முத்திரைகள் நாசமாகின

(இஸ்லாமாபாத்)

காத்மண்டு மலைப்பிரதேசமொன்றில் கடந்த திங்களன்று நடந்த விமான விபத்தொன்றின் போது 50 000 நேபாள தபால் முத்திரைகள் அழிந்து நாசமாகியுள்ளன இந்த விமான விபத்தில் 167 பேர் பலியானது தெரிந்ததே.

பாகிஸ்தான் பாதுகாப்பு அச்சகக் கூட்டுத் தாபனம் நேபாள அரசாங்கத்துக்குத் தேவைப்படும் முத்திரகளை வழமையாக அச்சிட்டு அங்கிருந்து பின்னர் காட்மாண்டுக்கு கொண்டு செல்லப்படுவதுண்டு.

அண்மையில் நேபாள அரசாங்கம் செய்து கொண்ட மிகப்பெரிய முத்திரை ஓடர் ஒன்றில் ஒரு பகுதியே இவ்வாறு நாசமாகியுள்ளது.

07 OCT 1992 17-OCT 1992 07 OCT 1992

# ஈழநாதம்

## தளபதிகள் குமரப்பா, புலேந்திரனுக்கு கிளிநொச்சியில் அஞ்சலிக்கூட்டம்

(நமது நிருபர்)

இந்திய அரசின் நயவஞ்சகத்தால் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட லெப்டினன்ட் கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகள், வரிப்புலி லெப் கேணல் சந்திரன் மற்றும் கிளிநொச்சி, வவுனியாக் கோட்டத்தில் ஒன்பதாம் பத்தாம் மாதங்களில் நினைவு கூரப்பட வேண்டிய மாவீரர்கள் நினைவாக எதிர்வரும் 5-ம்திகதிவன்னிமாவட்டத்தில் நினைவஞ்சலிக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இந்திய அரசின் நயவஞ்சக வார்த்தைகளை நம்பியதால் தமிழீழக் கடற்பரப்பில் வைத்துக் கைதாகி கொழும்புக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது கொள்கையின் படி நஞ்சை உண்டுஎமது நெஞ்சை உருக்கிய தியாகிகள் லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளையும், கொக்காவில் சிங்களப் படை முகாம் தகர்ப்பின்போது இம்மண்ணின் மைந்தர்களாகிய மாவீரர்களையும், கொக்காவில் முகாம் தகர்ப்பின்போது விழுப்புண்ணடைந்து சிகிச்சைக்காக இந்தியாவுக்குச் செல்லும் வழியில் வங்கக் கடலில் சிங்களப் படையினருடனான மோதலின்போது வரலாறாகிய வரிப்புலி லெப் கேணல் சந்திரன் (கண்ணாடி) மற்றும் கிளிநொச்சி வவுனியாக் கோட்ட ஒன்பதாம் பத்தாம் மாதம் நினைவுகூரப்பட வேண்டிய மாவீரர்களின்நினைவாகஎதிர்வரும்5-10-92அன்று வன்னிமாவட்டத்தில் வட்டக்கச்சியிலும், கனகராயன் குளத்திலும் மாலை 8.30 மணியளவில் நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. இந்நிகழ்வில் பங்குகொண்டு இவ்மாவீரர்களை தங்கள்உளக்கோயில்களில் அமர்த்திப் பூசிக்குமாறு தமிழீழ மக்களை வன்னிமாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

## அகதிகளின் பிரச்சினை ஆராயக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகாரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களின் சில அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதுகுறித்து கலந்தாலோசிப்பதற்கான கூட்டம் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ் அரச அதிபரும், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சிலஅமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

அகதிகளைத் தங்கவைப்பதற்கான கொட்டகைகளை மிகத் துரிதமாக அமைக்க நடவடிக்கை எடுப்பதெனவும், ஏற்கனவே அமைக்க ஆரம்பித்து குறையாக கைவிடப்பட்ட கொட்டகைகளை உடன் அமைப்பது எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தொழிலின்றி இருப்போரின் விபரங்களையும் அதனைநிவர்த்திசெய்ய ஏற்ற ஒழுங்குகளையும் கொண்ட அட்டவணை ஒன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது (பா)

## பெண்கள் மீது பலாத்காரம் இலங்கையில் அதிகரிப்பு

இலங்கையில் கடந்த பத்து ஆண்டுகளில் பெண்கள் மீது பலாத்காரம் பிரயோகித்த சம்பவங்கள் இருபதினாயிரத்தால் அதிகரித்துள்ளதாக சிறிலங்கா பொலிஸ் வட்டாரப் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

1982ஆம் ஆண்டில் பெண்கள் மீது பலாதகாரம் புரியும் சம்பவங்கள் 15,249 மட்டுமே நிகழ்ந்தன ஆனால் 1991ஆம் ஆண்டில் 34,474 ஆக இச் சம்பவங்கள் அதிகரிததுள்ளன.

இவை பொலிஸில் புகார் செய்யப்பட்ட சம்பவங்கள் மட்டுமே எனவும் பதியப்படாதவையும் சேர்த்தால் இதைவிட அதிகமாக இருக்கும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை கணவன்மார் மனைவிமாரைத் தாக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன எனவும் 1990இல் இப்படியான சம்பவங்கள் 13,368 எனவும் இது 1991இல் 19656 ஆக அதிகரித்துள்ளதாகவும் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## திங்கள் மூன்றில் எங்கள் நினைவில்

## தெரிவுக்குழு நேற்று கூடியது

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஆராய்ந்துவரும் பாராளுமன்றத் தெரிவுக்குழு நேற்றுக் கூடி அதிகாரப் பரவலாக்கலின் அலகு பற்றிஆராய்ந்ததாகக் கூறப்படுகிறது.

## விபத்தில் பலி

(மன்னார்)

லெப்ரினன்ட் கேணல் சுப

## வேவு விமானம் நோட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு பகுதிகளை நேற்று சிறிலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்களும் உலங்குவானூர்தி ஒன்றும் வேவு விமானமும் பல தடவைகள் சுற்றி நோட்டமிட்டுச் சென்றன

காலை 7.00 மணியளவில் மல்லாகம், அளவெட்டி, ஏழாலை ஆகிய பகுதிகளை இவை பல தடவை சுற்றி நோட்டமிட்டன. வேவு விமானம் யாழ். கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றது.

## சித்திரக் கண்காட்சி

(குருநகர்)

யாழ். திருமறைக் கலாமன்றம்இன்றுசனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் நான்கு தினங்கள் சித்திரக் கண்காட்சியை இலவசமாக நடாத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது

தினமும் யாழ் பிரதான வீதி மன்றக் கலைக் கூடத்தில் காலை 9-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரை மேற்படி சித்திரக் கண்காட்சியைப் பார்வையிடலாம். (21)

## தேர்த்திருவிழா

(குருநகர்)

வரலாற்றுப் புகழ் பெற்ற வண்ணை - ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்த்தான தேர்த்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 15 மணிக்கு வெகுசிறப்பாக நடைபெற உள்ளது.

06-10-92 செவ்வாய்க்கிழமை காலை10- 00மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் (21)

## 13 போராளிகள்

ராஜவதன் (அந்தோனிப்பிள்ளை ஜஸ்ரின், முகலாம் சுறுக்குத்தெரு, பாஷையூர்)

## இராணுவத்தை

ஒக்டோபர் மாதம் கடந்து இரண்டே இரண்டு நாள்கள் ஆகின்றன இதற்குள் பாதுகாப்புப் படையினர் பதினெட்டுப் பேர் ஏற்கனவே கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கடைசியாக நடந்த மோதலில் புலிப்படையினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டை கைப்பற்றும் முயற்சியில் இராணுவம் குடாநாட்டுத் தொண்டைமானாறு பகுதியில் துருப்புக்களை நிறுத்தியிருந்தது

இதற்கு அருகில் இருந்த கட்டைக்காடு என்ற இடத்தில் தான் புலிகள் வைகறைப் பொழுதில் தாக்கியதாக


## கட்டைக்காட்டுச் சமரில் மாவீரரான 13 வேங்கைகள்




சூரியகலா



மங்கை [தர்சா]



அருந்ததி



உலகநம்பி



இளந்திருமாறன்



செல்லப்பன்



ராஜவதனன்



பதுமன்



மோகன்







லும் ஏறியில் வங்கக் கடலில் சிங்களப படையினருடனான மோதலின்போது வரலாறாகிய வரிப்புலி லெப். கேணல் சந்திரன் (கண்ணாடி) மற்றும் கிளிநொச்சி வவுனியாக் கோட்ட ஒன்பதாம் பத்தாம் மாதம் நினைவுகூரப்பட வேண்டிய மாவீரர்களின்நினைவாகஎதிர்வரும்5-10-92அன்று வன்னிமாவட்டத்தில் வட்டக்கச்சியிலும், கனகராயன் குளத்திலும் மாலை 8.30 மணியளவில் நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. இந்நிகழ்

தால் அதிகரித்துள்ளதாக சிறிலங்கா பொலிஸ் வட்டார புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

1982ஆம் ஆண்டில் பெண்கள் மீது பலாத்காரம் புரியும் சம்பவங்கள் 15,249 மட்டுமே நிகழ்ந்தன ஆனால் 1991ஆம் ஆண்டில் 34,474 ஆக இச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இவை பொலிஸில் புகார் செய்யப்பட்ட சம்பவங்கள் மட்டுமே எனவும் பதியப்படாதவையும் சேர்த்தால் இதைவிட அதிகமாக இருக்கும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்

எனவும் 1990இல் இப்படியான சம்பவங்கள் 13,368 எனவும் இது 1991இல் 19656 ஆக அதிகரித்துள்ளதாகவும் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## திங்கள் மூன்றில் எங்கள் நினைவில்



மாவீரன்

## இயல்வாணன் (கஸ்ரோ)

[சோமசுந்தரம் கமலநாதன்]

வாரிவளவு, காரைநகர்

மண்ணில் 28. 12. 1974 — மண்ணிற்காக 03. 07. 1992

மண்ணுக்கு உரமாகிப் போன மாவீரா - காரை
மண்ணுக்கு புகழ்தேடித் தந்தவனே சீலா - கவிஞர்
பண்ணுக்கு கருவாகிப் போன இயல்வாணா - மண்
பாசத்தால் மெழுகாகி உருகினையே கஸ்ரோ

நேசத்தாய் மடியினிலே நீ உறங்கு கண்ணே - எம்
நெஞ்சுகளோ நிமிருதடா நினை எண்ணும் போது - நீ
நேசித்த விடுதலையை நிச்சயமாய் காண்போம் - அது
நிறைவேறும் விண்ணிருந்துன் தோழருடன் மகிழு.

40, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (3301)

- குடும்பத்தினர்
நண்பர்கள்.

## தெரிவுக்குழு நேற்று கூடியது

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஆராய்ந்துவரும் பாராளுமன்றத் தெரிவுக்குழு நேற்றுக் கூடி அதிகாரப் பரவலாக்கலின் அலகு பற்றிஆராய்ந்ததாகக் கூறப்படுகிறது.

## விபத்தில் பலி

(மன்னார்)

லெப்ரினன்ட் கேணல் சுபனின் இறுதி ஊர்வலத்தின் போது ஏற்பட்ட வாகனவிபத்தில் பாலசுப்பிரமணியம் சவுந்தரராஜன் (ஓமந்தை, புளியங்குளம்) என்பவர் பலியானார்.

கடந்த திங்களன்று பகல் முருங்கன், செம்மன்தீவில் இவ் விபத்து ஏற்பட்டது.

## மேஜர் முரளி நினைவு விளையாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழாவில் தாச்சிப் போட்டிகள் இன்று முற்பகல் 9.00 மணிக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன இப் போட்டிகளில் ஆண்களுக்கான போட்டிகளில் எட்டு குழுக்களும் பெண்களுக்கான. போட்டிகளில் எட்டுக் குழுக்களும் பங்குபற்றவுள்ளன.

## தீருவிலில்

மலர் தூவிச் சுடரேற்றி நினைவு கூரல்கள் இடம் பெறும்.

பொதுஸ்தாபனங்கள், கிளைநிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள், கல்விநிலையங்கள், துறைசார்ந்த நிலையங்கள் என்பனவற்றில் படங்கள் வைக்கப்பட்டு மாலையிட்டு சுடரேற்றி இம் மாவீரர்கள் நினைவு கூரப்படுவர்.

இம் மாவீரர்களின் நினைவாக தமிழீழமெங்கும் பொதுக்கூட்டங்கள் இடம் பெறவுள்ளன.

யாழ் மாவட்ட பொதுக் கூட்டம் தீருவில் மைதானத்தில் நாளை மறுதினம் பிற்பகல் 4-45 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ மாவீரர் பணிமனை வெளியீடாக ''தீருவில் தீ'' என்னும் சுருக்கவரலாற்று நூல் வெளியிட்டு வைக்கப்படும்.

## இராணுவத்தை

ஒக்டோபர் மாதம் கடந்து இரண்டே இரண்டு நாள்கள் ஆகின்றன இதற்குள் பாதுகாப்புப் படையினர் பதினெட்டுப் பேர் ஏற்கனவே கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கடைசியாக நடந்த மோதலில் புலிப்படையினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டை கைப்பற்றும் முயற்சியில் இராணுவம் குடாநாட்டுத் தொடுவாய்ப் பகுதியில் துருப்புக்களை நிறுத்தியிருந்தது

இதற்கு அருகில் இருந்த கட்டைக்காடு என்ற இடத்தில் தான் புலிகள் வைகறைப் பொழுதில் தாக்கியதாக இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர். இராணுவத்தின் மீது இப்படிப்பட்ட தாக்குதல்களை நடத்துவதன் மூலம் இராணுவம் யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறுவதைத் தடுப்பதே தமது நோக்கம் எனப் புலிப்படைத் தலைவர்கள் கூறுகின்றனர் இராணுவம் இப்படிப் பெருந்தொகையில் படிந்தாலும் கூட இராணுவம் யாழ்ப்பாணத்தைப் பிடிக்கும் முயற்சியைக் கைவிடுமா என்பது சந்தேகம்தான் என்று கொழும்பிலிருந்து பி. பி. ஸி. செய்தியாளர் சுவாக்சோ நோஸ் அனுப்பிய செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது

## முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்கு கூ. சங்கம்
சுன்னாகம்

### சீமெந்து கட்டட தொழிலாளருக்கான இலவச நிவாரணம்

வலிதெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருக்கும் சீமெந்து கட்டட தொழிலாளர் குடும்பத்திற்கு இரண்டு வார இலவச நிவாரணம் பின்வரும் பகுதிகளில் வைத்து விநியோகிக்கப்படும்.

கிளை இல 28 மயிலனி - சுன்னாகம்
கிளை இல. றொட்டி ஆலடி, கே. கே. எஸ். வீதி, உடுவில்

இவ்விநியோகம் 2-10-92 இல் தொடங்கி 10-10-92 இல் முடிவடையும்.


இவ்விநியோகத்தைத் துரிதமாகச் செய்து முடிப்பதற்குச் சிரமங்களைப் பாராது விரைவில் பொருள்களைப் பெற்றுச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் இவ்விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளச் செல்லும் போது புதிய குடும்ப அட்டையையும் உலர் உணவு அட்டையையும், சீமெந்து கட்டடத் தொழிலாளர் சங்கத்தினால் வழங்கிய அட்டையையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

இப்படிக்கு
பொது முகாமையாளர்

(3306)



ராஜவதனன்



பதுமன்



மோகன்



தமிழ்மணி



தாமரைக் கண்ணன்



இளமாறன்

கட்டைக்காட்டில் மினிமுகாமையும், இரண்டரை மைல் நீளமான இராணுவ வேலியையும் தகர்த்து சிறிலங்கா இராணுவத்தினரின் ஆயுதக் கிடங்கைக்கைப் பற்றிய சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 13 வேங்கைகள்



நகீரன்

## 'வாணிக்கொரு வெற்றி' கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு சிறிராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் 'வாணிக்கொரு வெற்றி' என்னும் கலைவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இதில் அம்பாள் அடியார்களைக் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது

## நிதி உதவி

தமிழ்நாட்டில் போராளிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக தமிழக அரசுக்கு மத்திய அரசு முப்பது கோடி ரூபாவைஅனுமதித்திருக்கிறது மத்திய உள்துறை அமைச்சர் எச். பி. சவான் நேற்று உதக மண்டலத்தில் செய்தியாளர் மத்தியில் இத்தகவலை வெளியிட்டார்.

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**02-10-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5960

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
28-3306, 42-728, 26-536, 28-8177, 26-6309, 26-5560, 28-1992, 24-4153, 24-5774, 27-6415, 26-5563, 26-4792, 24-9611, 26-1098, 26-9992, 26-0048.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது